**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.18/2024**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயன் | மதம் | : இந்து |
| த/பெ | : ரோசிக்கான் | ஜாதி | : -- |
| வயது | : 62 | கிராமம் | : அலமேலுமங்காபுரம் |
| தொழில் | : தையல் கடை | வட்டம் | : திருத்தணி |

**12.02.2026**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் தாவா சொத்திற்கானது இல்லை என்றால் சரியல்ல. அது பக்கத்தில் நான் கட்டியுள்ள வீட்டிற்கானதாகும். நான் வழக்கு சொத்தில் குளியல் அறை கட்டியுள்ளேன். எனக்கு A.M. பேட்டை அலமேலுமங்காபுரத்தில் வீடு உள்ளது என்றால் ஆமாம். என் வீட்டிற்கு அருகில் சாலை உள்ளது என்றால் வடக்கு பக்கம் சாலை உள்ளது. வடக்கு பக்கம் உள்ள சாலையை ஒட்டிதான் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு என்னுடையதுதான் என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் புகைப்படம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதை ஒட்டி தகர சீட்டு போட்ட வீடு உள்ளது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடுதான் அது என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் புகைப்படம் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதை ஒட்டி உள்ள அடுத்த வீடு மனோகரனுடைய வீடு என்றால் புல எண்.19ல் நான் வீடு கட்டியுள்ளேன். புல எண்.20ல் வேலாயுதம் வீடு கட்டியுள்ளார். புல எண்.21ல் எனக்கும் வேலாயுதம் பண்டாரத்திற்கும் பாதிப்பாதி ஆகும்.

8. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடுதான் மனோகரனது வீடு என்றால் அது எனக்கும் மனோகரனுக்கும் பாதிப்பாதி

குளியலறைக்கும் கழிப்பறைக்கும் விடப்பட்ட இடமாகும். அதில்தான் நான் ஆடு மாடு கட்டி வைத்திருந்தேன். நான் சொல்வது பொய் என்றாலும் நான் மனோகரனது வீட்டு வாசல் இடத்தை என்னுடையது என்று கூறி வருகிறேன் என்றாலும் சரியல்ல. வடக்கு பக்கம் சாலையில் இருந்து தொடர்ந்து 3 வீடு உள்ளது என்றால் தற்போதுதான் அந்த இடத்தில் கட்டியுள்ளார். வடக்கு பக்கம் சாலையில் இருந்து முதல் இரண்டு வீடுகளின் வழியாகதான் 3ம் வீட்டிற்கு பாதை உள்ளது என்றால் இல்லை. முதலில் உள்ள 2 வீடுகளுக்கு மட்டும்தான் பாதை உள்ளது. 3வது உள்ள இடம் எனக்கு மட்டும் பாத்தியப்பட்ட பாதையாகும். வழக்கு சொத்திற்கான புல வரைப்படத்தின்படி முதலில் உள்ள 2 வீடுகளுக்கு மட்டும்தான் பாதை உள்ளது என்றாலும் 3வது வீட்டிற்கு பாதை இல்லை என்றாலும் நானும் அதைதான் சொல்கிறேன்.

9. மேற்படி 3 வீடுகளுக்கும் வடக்கு பக்கம் முனி பண்டாரம் வகையறாவின் சொத்து உள்ளது என்றால் முனி பண்டாரம் என்பது நாகரத்தினம் வகையறாதான். அதேபோல் மேற்கு பக்கம் மாரப்ப பண்டாரம், பொஜ்ஜி பண்டாரம் வகையறா சொத்து என்றால் ஆமாம். பொஜ்ஜி பண்டாரம் என் தாத்தா ஆவார். தெற்கு பக்கம் ஈச்சம்பாடி முனி பண்டாரம் வகையறா சொத்து என்றால் இல்லை. எங்களது மாந்தோப்பு இருந்தது. பக்கத்தில் ஈச்சம்பாடி முனி பண்டாரத்திற்கு இரு பக்கமும் சொத்திருந்தது. எங்கள் சொத்தைதான் ஈச்சம்பாடி முனி பண்டாரத்திற்கு கொடுத்தோம். 1974ல் உயில் எழுதி வைத்த என் பாட்டி அம்மணியம்மாவின் கணவர்தான் கோவிந்த பண்டாரம் என்றால் சரிதான். கோவிந்த பண்டாரத்திற்கு அந்த நான்கு எல்லைகளுக்குள் சொத்து இல்லை என்றால் அவர் இறந்து பல வருடங்கள் ஆனதால் அம்மணியம்மாள் பெயரில் காட்டப்பட்டுள்ளது.

10. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகளில் அம்மணிம்மாளோ கோவிந்த பண்டாரமும் இல்லை என்றாலும் கோவிந்த பண்டாரத்தின் சகோதரர்களான முனி பண்டாரம், சின்னப்பா பண்டாரம்தான் உள்ளார்கள் என்றால் அம்மணியம்மாள் இருந்தார். அதனால்தான் சொத்து எங்களுக்கு

வந்தது. என் சித்தப்பா பெயர் முனி பண்டாரம் இல்லை. முனிரத்தின பண்டாரம். 1947ல் என் அப்பா வேலாயுத பண்டாரத்திற்கு சின்னப்பா பண்டாரம் முனி பண்டாரம் வகையறா தாவா சொத்தை நான்கு எல்லை காட்டி ஆவண எண்.2950/1947ல் ஆவணம் எழுதி கொடுத்துள்ளனர் என்றால் தவறு. அது வேறு சொத்தாகும். அந்த இடத்தில் வேலாயுத பண்டாரம் வீடு கட்டியுள்ளார். மேற்படி ஆவண தேதியில் இருந்து வழக்கு சொத்தில் மனோகரனும் அவரது சகோதரரும்தான் அனுபவத்தில் உள்ளார் என்றால் அது வேறு சொத்தாகும்.

11. என் பாட்டி அம்மணியம்மாள் உயில் எழுதி வைத்ததற்கு அம்மணியம்மாள் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் ஆவணம் உள்ளது. வழக்கு சொத்து தனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்ட பட்டா எண்ணோ, வருவாய் ஆவணங்களோ உயிலில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதன் பின்பு வருவாய் ஆவணங்கள் என் பெயரில் வந்தது. வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்துதான் எனக்கு பட்டா கொடுத்தார். வருவாய் கோட்டாட்சியர் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு பட்டா கொடுத்தார் என்பதை அவரது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அவர் எனது அனுபவத்தை சரிபார்த்துதான் கொடுத்தார். எனக்கு கொடுத்த பட்டா எண்.417 சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் ஏற்பட்ட உட்பிரிவு வரைப்படமும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

12. மேற்படி உத்தரவை எதிர்த்து 06.03.2023லேயே மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு கொடுத்துள்ளார் என்றால் அவர்கள் மேல்முறையீடு செய்யவில்லை. இன்றும் வழக்கு சொத்தின் அ பதிவேட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றுதான் குறிப்பு உள்ளது என்றால் அதை சரி செய்துதான் எனக்கு பட்டா கொடுத்தார்கள். அவ்வாறு எதுவும் சரி செய்யப்படவில்லை என்றாலும் இன்றுவரை வழக்கு சொத்தின் அ பதிவேட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றுதான் குறிப்பு உள்ளது என்றாலும் அதை சரி செய்துதான் எனக்கு பட்டா கொடுத்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக

நானோ என் அண்ணன் தம்பிகளோ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்ல என்றால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை. மனோகரனின் சகோரர்கள் அ.வ.எண்.431/1991 என இந்நீதிமன்றத்தில் பாக வழக்கு தாக்கல் செய்திருந்தனர் என்றால் அவர்கள் சொத்திற்காக தாக்கல் செய்திருந்தார்கள். அதைதான் வழக்கு சொத்தின் அ பதிவேட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை சரி செய்துதான் எனக்கு பட்டா கொடுத்தார்கள்.

13. அவ்வாறு அதை சரி செய்துதான் எனக்கு பட்டா கொடுத்தார்கள் என்பதை காட்ட நான் பசலி எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் பட்டாவே தாக்கல் செய்துள்ளேன். நான் அதிகார துஷ்பரயோகம் செய்து அந்த பட்டாவை பெற்றதால்தான் அது இன்றுவரை கணினியில் பதிவேற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண்.219ல் புல எண்.39/19ல் தான் விஜயன் மனைவி சாந்தி என்ற பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் வழக்கு சொத்திற்கு பட்டா வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த இடத்திற்கும் சேர்த்துதான் வரி கட்டி பட்டா வாங்கியுள்ளேன். மனோகரனின் வீட்டை ஒட்டி என் வீடு இருப்பதால் என் வீட்டை அபகரிக்கவேண்டி நான் என் அதிகாரத்தை பயன்படுத்தி பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

14. அம்மணியம்மாள் தனது உயிலில் வழக்கு சொத்தின் முன் ஆவணம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் அது பூர்வீக சொத்தாகும். தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் மூதாதையர் காலத்தில் பிரதிவாதிகளுக்கு கொடுத்த சொத்தை நான் தவறுதலாக பட்டா பெற்று கொண்டு என்னுடைய சொத்து என கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. கோவிந்த பண்டாரத்தின் மூதாதையரான ரத்தினம் பண்டாரம் 1947ல் வேலாயுதத்திற்கு எழுதி கொடுத்த சொத்தை இன்றுவரை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் எனக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமேயில்லை என்றாலும் சரியல்ல. வேலாயுதம் கிரையம் வாங்கிய தேதி

முதல் அவரது வகையறாக்கள் அனுபவித்து வந்து தற்போது மனோகரன் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் அதிகார துஷ்பிரயோகம் செய்து பெற்ற பட்டாவை எதிர்த்து மனோகரன் தாக்கல் செய்த மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றாலும் எனது பட்டா ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

15. மனோகரன் சொத்து தன்னுடையது என அ.வ.எண்.48/2023ஐ தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறு. அந்த வழக்கை இழுத்தடிக்க வேண்டியும் அதில் உள்ள ஆவணங்களை இருட்டடிப்பு செய்ய வேண்டியும் அ.வ.எண்.18/2024ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.18/2024 ஆவணங்களால் ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. தாவா சொத்து மனோகரனுக்கு சொந்தமான சொத்து என்றாலும் எனக்கோ என் மூதாதையருக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயிலும் அந்த உயிலின் படி நான் வாங்கியுள்ள வருவாய் ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)